THE HINDU - ENGLISH
Dated: 11.02.2025



# Chandhirakumar of DMK sworn in as Erode East MLA

V.C. Chandhirakumar of the DMK was sworn in as the Member of the Legislative Assembly (MLA) from Erode (East) on Monday. Speaker M. Appavu administered the oath in his chamber, in the presence of Chief Minister M.K. Stalin and others. Speaking to reporters, Mr. Chandhirakumar said: "I believe in the principles of Periyar but at the same time, I'm not without religious belief." He said he dedicated his victory to the Chief Minister and the Deputy Chief Minister and thanked the Erode (East) voters for choosing him. With Mr. Chandhirakumar being elected, the ruling DMK has 133 MLAs (excluding the Speaker) in the 234-member Assembly.

DECCAN CHRONICLE
Dated: 11.02.2025

# New DMK MLA of Erode East takes oath

DC CORRESPONDENT
CHENNAI, FEB. 10

The newly elected MLA from Erode East constituency, V C Chandrakumar, was sworn in as a member of the House on Monday by the Speaker M Appavu at his chamber in the Assembly in the presence of Chief Minister M K Stalin, Deputy Chief Minister Udhayanidhi Stalin, VCK president Thol Thirumavalavan and other State Ministers.

A statement from the Assembly secretary K Srinivasan said that the Speaker administered the oath in accordance with the Constitution at 10.22 am.

Speaking to the media, Chandrakumar said that he would fulfil the promises that he gave to the people in a year's time and that his victory was a harbinger for a total sweep by the DMK in 2026 Assembly polls. Whether the opponents came to the electoral battle individually or together, they would be defeated, he said.

The election of Chandrakumar has taken the DMK's strength in the 234-member Assembly to 133, while its major ally the Congress had 18 members. Other allies have a total of 8 members – VCK 4, CPI 2 and CPM 2. In the opposition benches, the AIADMK has 66 members, PMK 5 and the BJP 4. The Speaker, who the election as a DMK candidate, is unattached.

Describing the victory of Chandrakumar was a reaffirmation that the State was a land of social justice, Thirumavalavan said the boycott of the polls by the AIADMK was due to a conspiracy by the Sangh Parivar and proof of the secret deal between the AIADMK and BJP.

Thirumavalavan said that he placed four demands to the Chief Minister, whom he met in the Secretariat, one of them related to the Vengaivayal issue, where the people of the village felt that the victims of the crime had been victimized against as perpetuators of the crime.

The present FIR on the case was not final, he said, adding that the other demands pertained to ensuring the promotion of government officers belonging to the Scheduled Castes and Tribes though Section 164-a of the Constitution, put an end to caste violence against SC/ST people and a commission of enquiry by a retired judge into the Vengaivayal issue.

TIMES OF INDIA
Dated: 11.02.2025

# SC: Should convicts be barred for life from contesting polls?

Dhananjay.Mahapatra
@timesofindia.com

**New Delhi:** If a convicted person is barred from govt employment, what is the rationale behind provisions in the Representation of the People Act that allow a convicted criminal to contest elections and become a lawmaker six years after he has served the sentence, Supreme Court asked on Monday.

After two landmark judgments on electoral reforms — mandatory disclosure of assets and criminal antecedents by candidates, and prescribing automatic disqualification on conviction and

**SEEKS RESPONSE OF CENTRE, ECI**

sentence beyond two years — a bench of Justices Dipankar Datta and Manmohan decided to foray into a possible third by agreeing to test the constitutional validity of parts of Sections 8 and 9 of RP Act — should there be a life ban on the convicted on contesting any election?

The bench asked the Union govt and Election Commission of India to file their responses to the plea by advocate-petitioner Ashwini Kumar Upadhyay within three weeks.

▶ Eligible after 6 yrs, P 14

# Act: Person eligible to contest polls 6 yrs after serving out sentence

▶ From P 1

It said if the govt and EC do not file their responses within the stipulated period, it would still proceed with the matter and posted further hearing on March 4.

Under RP Act, a person is eligible to contest elections six years after he has served out the sentence awarded to him upon conviction in a criminal case or one concerning moral turpitude or corruption. Appearing for the petitioner, senior advocate Vikas Singh gave the example of a convicted criminal not being eligible for a peon's job in govt but being eligible, six years after completion of prison term, to be a lawmaker.

Drawing the court's attention to rising crimes by juveniles, Singh said even if held guilty for murder, a juvenile aged 17 would not get imprisonment of more than three years. This means, by the age of 26, he would be eligible to contest elections and if backed by a political party, he would stand a fair chance of becoming a lawmaker.

Though this example caught the bench's imagination, Justice Manmohan appeared more aware of ground realities and machinations of convicted politicians in getting around even the six-year ban, making

**Tamil Nadu's additional advocate general Amit Anand Tiwari said the main stakeholders, national and state parties, should be given notice for their responses**

their wives either the chief minister or lawmaker. "We must not do something that would provide another ruse for politicians to retain control through remote control," he said.

Amicus curiae and senior advocate Vijay Hansaria supported the petition and told the court that the time had come to test the constitutional validity of certain parts of Sections 8 and 9 of RP Act that allowed a convicted criminal/politician to enter/re-enter the political arena.

Tamil Nadu's additional advocate general Amit Anand Tiwari said the main stakeholders, national and state parties, should be given notice for their responses. The bench said these days SC proceedings were widely reported and it would hear arguments from all stakeholders, whosoever decided to address the court on this issue.

THE NEW INDIAN EXPRESS
Dated: 11.02.2025

## Bipolar contest and minorities in urban polls

After the 2023 Assembly and 2024 Lok Sabha elections, Chhattisgarh is once again preparing for another election – the urban body polls. This election is expected to be a contest primarily between the ruling BJP and the opposition Congress. The participation of minorities in the electoral process are not usually seen as encouraging despite their assumed role in playing unspecified determining, though small, in the fortunes of political parties. The Congress has given 7.38% of its tickets to Muslim candidates and the BJP's share for Muslim faces is barely 0.73%.

D.T.NEXT
Dated: 11.02.2025



Speaker M Appavu administering oath to the newly elected MLA VC Chandrakumar at the Secretariat on Monday

# Chandrakumar takes oath as legislator in the presence of CM Stalin

**CHENNAI: VC Chandrakumar, who won the Erode East bypoll by a thumping margin of over 90,000 votes, on Monday formally assumed oath as the MLA of the constituency.**

Speaker M Appavu administered the Oath of Office to VC Chandrakumar at his chamber in the Assembly Secretariat on Monday morning. Chief Minister MK Stalin, State Irrigation Minister Duraimurugan, Deputy Chief Minister Udhayanidhi Stalin, VCK president Thol Tirumavalavan and Tamil Nadu Congress Committee (TNCC) president K Selvaperunthagai were among the leaders who were present when Chandhirakumar assumed office as the MLA of the urban Erode constituency.

With 46 candidates in the poll fray, DMK's Chandrakumar romped home comfortably by a margin of 90,629 votes, while distant runner-up MK Seethalakshmi of Naam Tamizhar Katchi (NTK) managed to secure only 23,810 votes, falling 2,000 votes short of the mandatory vote share among the total polled votes required to retain the deposit.

The February 5 bypoll was one of the low-profile bypolls to be held in the State in recent times, owing to the abstention of major opposition parties, mainly the AIADMK. The bypoll to Erode East was necessitated for the second time in four years due to the demise of its MLA EVKS Elangovan on December 14, 2024. Elangovan was elected in a bypoll held in February 2023 following the death of his son and constituency MLA Thirumahan Evera in January 2023.

THE HINDU - TAMIL

Dated: 11.02.2025



• முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில், ஈரோடு கிழக்கு தொகுதி எம்எல்ஏவாக சந்திரகுமாருக்கு பேரவை தலைவர் அப்பாவு நேற்று பதவி பிரமாணம் செய்து வைத்தார். உடன் அமைச்சர்கள், கூட்டணி கட்சி தலைவர்கள்.

### முதல்வர், பேரவை தலைவர் முன்னிலையில்

# ஈரோடு கிழக்கு எம்எல்ஏ சந்திரகுமார் பதவியேற்பு

**சென்னை**

ஈரோடு கிழக்கு தொகுதியில் வெற்றி பெற்ற வி.சி.சந்திரகுமார், சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின், பேரவை தலைவர் அப்பாவு முன்னிலையில், சட்டப்பேரவை உறுப்பினராக நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ஈவிகேஎஸ் இளங்கோவன் காலமானதை தொடர்ந்து, ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கு கடந்த 5-ம் தேதி இடைத் தேர்தல் நடைபெற்றது. இதில் திமுக சார்பில் போட்டியிட்ட வி.சி.சந்திரகுமார் 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில் முதல்வர் ஸ்டாலினை அவர் நேற்று காலை சந்தித்து வாழ்த்து பெற்றார். பின்னர், தலைமைச் செயலகத்தில் பேரவை தலைவர் அப்பாவு அறையில் சட்டப்பேரவை உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு சட்டப்பேரவை தலைவர் அப்பாவு, பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில், முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பேரவை துணை தலைவர் கு.பிச்சாண்டி, துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமை கொறடா ராமச்சந்திரன், கூட்டணி கட்சி தலைவர்கள் செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்), வைகோ (மதிமுக), திருமாவளவன் (விசிக), முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட்), பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட்), வேல்முருகன் (தவாக), சட்டப் பேரவை உறுப்பினர்கள், சட்டப் பேரவை செயலர் சீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பிறகு, செய்தியாளர்களிடம் சந்திரகுமார் கூறியதாவது:

தமிழக அரசு செயல்படுத்தி வரும் நலத் திட்டங்கள், வெகுஜன மக்களை நேரடியாக சென்றடைந்துள்ளது. ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல் வெற்றிக்கு அதுவே முக்கிய காரணம். 234 தொகுதி மக்களின் மனநிலையைதான் ஈரோடு கிழக்கு தொகுதி பிரதிபலித்துள்ளது. அதனால், இந்த வெற்றி 2026 சட்டப்பேரவை தேர்தலிலும் தொடரும்.

ஈரோடு கிழக்கில் இந்த ஓராண்டு காலத்தில் நிலுவையில் உள்ள பணிகளை ஆய்வு செய்து, அவற்றை தொடர்ந்து மேற்கொள்வேன்.

பெரியார் தவறு செய்திருந்தால் சுட்டிக் காட்டலாம். ஆனால், பெண் சமுதாயம் உட்பட ஒட்டுமொத்த தமிழரின் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்த பெரியாரை நேற்று பாராட்டிவிட்டு இன்று அரசியல் ஆதாயத்துக்காக, ஆர்எஸ்எஸ் உள்ளிட்ட அமைப்புகளின் திட்டங்களை செயல்படுத்த, பெரியார் பிறந்த ஈரோட்டிலேயே அவரை விமர்சித்த சீமான் மனித பிறவியாக இருக்க முடியாது. அவர் ஒரு மோசமான அருவருக்கத்தக்க அரசியல்வாதி.

**எலுமிச்சம்பழம் ஏன்?**

பெரியார் கொள்கையில் மிகுந்த நம்பிக்கை உள்ளவன் நான். அதற்காக இறைபக்தி இல்லாதவன் அல்ல.

கையில் எலுமிச்சம்பழம் வைத்துக் கொண்டு நான் வேட்புமனு தாக்கல் செய்ததாக கூறுகின்றனர். அந்த பழத்துக்கும், கோயிலுக்கும் சம்பந்தம் இல்லை. தவிர, மனு தாக்கல் செய்யும்போது கையில் எலுமிச்சம்பழம் இல்லை. மேஜையில் வைத்து விட்டுதான் வேட்புமனு தாக்கல் செய்தேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

THE HINDU - TAMIL

Dated: 11.02.2025

# டெல்லி பேரவைக்கு தேர்வானவர்களில் 31 எம்எல்ஏக்கள் மீது வழக்குகள் நிலுவை

**புதுடெல்லி**

தேர்தலின்போது வேட்பாளர்கள் தாக்கல் செய்த பிரமாண பத்திரங்களை ஆய்வு செய்து ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ஏடிஆர்) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

டெல்லி சட்டப்பேரவைக்கு பாஜக சார்பில் தேர்வாகியுள்ள 48 பேரில் 16 பேர் மீது குற்ற வழக்குகள் உள்ளன. ஆம் ஆத்மி சார்பில் தேர்வான 22 பேரில் 15 பேர் மீது குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. 7 பாஜக எம்எல்ஏக்கள் மீதும், 10 ஆம் ஆத்மி எம்எல்ஏக்கள் மீதும் கடும் குற்றப்பிரிவில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளன.

புதிதாக தேர்வான 70 எம்எல்ஏக்களுக்கு மொத்தமாக ரூ.1,542 கோடி சொத்து உள்ளது. எம்எல்ஏக்களின் சராசரி சொத்து மதிப்பு ரூ.22.04 கோடியாக உள்ளது.

தேர்வான புதிய எம்எல்ஏக்களில் 64 சதவீதம் பேர் பட்டதாரிகளாகவும், 33 சதவீதம் பேர் 5 முதல் 12-ம் வகுப்பு படித்தவர்களாகவும் உள்ளனர். தேர்வான 70 பேரில் 5 பேர் மட்டுமே பெண் எம்எல்ஏக்கள் ஆவர். கடந்த 2020-ல் 8 பெண் எம்எல்ஏக்கள் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு அந்த அறிக்கையில் ஏடிஆர் தெரிவித்துள்ளது.

DAILY THANTHI
Dated: 11.02.2025

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில்

# வெற்றி பெற்ற வி.சி.சந்திரகுமார் எம்எல்ஏவாக பதவியேற்பு



தமிழக சட்டப்பேரவை தலைவர் அறையில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற வி.சி.சந்திரகுமாருக்கு பேரவைத்தலைவர் அப்பாவு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். அருகில், முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் துரைமுருகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், வைகோ, செல்வப்பெருந்தகை, திருமாவளவன், முத்தரசன், பி.சண்முகம்.

சென்னை, பிப். 11: ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற திமுக உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் எம்எல்ஏவாக நேற்று பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு சபாநாயகர் அப்பாவு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்றனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி எம்எல்ஏவாக இருந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறைவையொட்டி அந்த தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தல் கடந்த 5ம் தேதி நடந்து முடிந்தது. வாக்கு எண்ணிக்கை கடந்த 8ம்தேதி நடந்தது. இதில், திமுகவை சேர்ந்த வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 1,14,439 வாக்குகளை பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சீதாலட்சுமி 23,810 வாக்குகள் பெற்றார். நோட்டாவுக்கு 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகள் கிடைத்தன. இதனால், 90,629 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டார். இந்த தேர்தலில் திமுக வேட்பாளரை தவிர எதிர்த்து போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட 45 வேட்பாளர்களும் டெபாசிட் இழந்தனர்.

இந்நிலையில், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற வி.சி.சந்திரகுமார் சட்டப்பேரவை உறுப்பினராக சென்னை தலைமை செயலகத்தில் நேற்று பதவியேற்றுகொண்டார். அவருக்கு சபாநாயகர் அப்பாவு பதவி பிரமாணம் செய்து வைத்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடந்த இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, எ.வ.வேலு உள்ளிட்டோரும் பங்கேற்றனர். கூட்டணி கட்சிகளை சேர்ந்த செல்வப்பெருந்தகை, வைகோ, திருமாவளவன், முத்தரசன், சண்முகம், கொங்குநாடு ஈஸ்வரன் உள்ளிட்ட தலைவர்களும் பங்கேற்றனர்.

DAILY THANTHI

Dated: 11.02.2025

### ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில்

# நாம் தமிழர் கட்சியின் வாக்கு சதவீதம் அதிகரித்தது

## 44 வேட்பாளர்களை பின்னுக்கு தள்ளிய நோட்டா

ஈரோடு, பிப்.11-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் வாக்கு சதவீதம் அதிகரித்தது. 44 வேட்பாளர்களை நோட்டா பின்னுக்கு தள்ளியது.

### இடைத்தேர்தல் புறக்கணிப்பு

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் முடிவு நேற்று முன்தினம் வெளியானது. இதில் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 1 லட்சத்து 15 ஆயிரத்து 709 வாக்குகளை பெற்று அபார வெற்றி பெற்றார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி 24 ஆயிரத்து 151 வாக்குகளை பெற்று 2-வது இடத்தை பிடித்தார். அரசியல் கட்சியினர், சுயேச்சைகள் என மொத்தம் 46 பேர் களத்தில் இருந்த நிலையில், யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை என்ற நோட்டா சின்னம் 6 ஆயிரத்து 109 வாக்குகளை பெற்று 3-வது இடத்தில் உள்ளது.

தி.மு.க. வேட்பாளர் சந்திரகுமார் 74.7 சதவீத வாக்குகளை தனக்கு சாதகமாக்கி கொண்டார். அதேசமயம் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி 15.59 சதவீத வாக்குகளை பெற்று தோல்வியை தழுவினாலும், கடந்த தேர்தலைவிட அதிகமாக வாக்குகளை பெற்றிருப்பதால் இதையும் ஒரு வெற்றியாக பார்ப்பதாக அவர் தெரிவித்து உள்ளார்.

### வாக்கு சதவீதம் அதிகம்

கடந்த 2016-ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி 1.53 சதவீத வாக்குகளையும், 2019-ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் 4.08 சதவீத வாக்குகளையும் ஈரோடு கிழக்கு தொகுதியில் நாம் தமிழர் கட்சி பெற்றிருந்தது. 2021-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 7.65 சதவீத வாக்குகளையும், 2023-ம் ஆண்டு இடைத்தேர்தலில் 6.35 சதவீத வாக்குகளையும், 2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் 8.35 சதவீத வாக்குகளையும் இதே தொகுதியில் பெற்றிருந்தது.

தொடர்ந்து ஏறுமுகமாக வாக்கு சதவீதத்தை பெற்று வந்த நாம் தமிழர் கட்சி கடந்த இடைத்தேர்தலை காட்டிலும் இருமடங்கு ஓட்டுகளை இந்த இடைத்தேர்தலில் பெற்றுள்ளது. தேர்தலை புறக்கணித்த முக்கிய கட்சிகளின் ஓட்டுகள் நாம் தமிழர் கட்சிக்கு சென்றிருப்பதாகவும் விமர்சனங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

### நோட்டா

இது ஒருபுறம் இருந்தாலும், நோட்டா சின்னமும் 3-வது இடத்தை பிடித்து இருப்பது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 44 பேரை நோட்டா பின்னுக்கு தள்ளியுள்ளது. மொத்த வாக்குப்பதிவில் தி.மு.க., நாம் தமிழர் கட்சியினர் பெற்ற வாக்குகளை தவிர நோட்டாவுக்கும், மற்ற வேட்பாளர்களுக்கும் மொத்தம் 14 ஆயிரத்து 797 வாக்குகள் கிடைத்துள்ளன. முக்கிய அரசியல் கட்சியினர் போட்டியிடாததால் இந்த வாக்குக்கள் தி.மு.க.வுக்கு எதிராக விழுந்த வாக்குகள் என்றும் அரசியல் விமர்சகர்கள் கருத்துகளை முன்வைத்து உள்ளனர்.

DAILY THANTHI
Dated:11.02.2025



ஈரோடு கிழக்கு தொகுதியில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமாருக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் அப்பாவு பதவிப் பிரமாணம் செய்து வைத்தபோது எடுத்தபடம்.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் வெற்றி

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# சந்திரகுமார் எம்.எல்.ஏ.வாக பதவி ஏற்பு

சென்னை, பிப்.11-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் எம்.எல்.ஏ.வாக பதவி ஏற்றார்.

### தி.மு.க. வெற்றி

ஈரோடு கிழக்கு தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் சந்திரகுமார் வெற்றி பெற்றார்.

இதற்கிடையே அவர் எம்.எல்.ஏ.வாக பதவி ஏற்பதற்கான ஏற்பாடுகள், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சபாநாயகர் அறையில் செய்யப்பட்டு இருந்தன.

அதைத்தொடர்ந்து நேற்று 10 மணியளவில் சபாநாயகர் அறைக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வந்தார். அவருடன் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், நேரு, எ.வ.வேலு, முத்துசாமி, துணை சபாநாயகர் பிச்சாண்டி வந்தனர்.

### கூட்டணி கட்சி தலைவர்கள்

இந்த நிகழ்ச்சிக்கு கூட்டணிக்கட்சி தலைவர்கள் செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்), வைகோ (ம.தி.மு.க.), திருமாவளவன் (விடுதலைச் சிறுத்தைகள் கட்சி), முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்டு கட்சி), சண்முகம் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி), வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி) ஆகியோர் வந்திருந்தனர். அதைத்தொடர்ந்து சந்திரகுமாருக்கு சபாநாயகர் அப்பாவு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். 'உளமாற உறுதியளிக்கிறேன்' என்று உறுதிமொழியை வாசித்து, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் எம்.எல்.ஏ.வாக சந்திரகுமார் பதவி ஏற்றுக்கொண்டார். பின்னர் அவருக்கு முதல்-அமைச்சர் வாழ்த்து தெரிவித்தார்.

### பொன்னாடை போர்த்தி வாழ்த்து

அதைத்தொடர்ந்து பதவி ஏற்பு ஆவணத்தில் சந்திரகுமார் கையெழுத்திட்டார். அவருக்கு சபாநாயகர் அப்பாவு, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர். பதிலுக்கு, துணை முதல்-அமைச்சருக்கு சந்திரகுமார் பொன்னாடை போர்த்தினார்.

அதைத்தொடர்ந்து தலைமைச் செயலகத்தில் எம்.எல்.ஏ. சந்திரகுமார் அளித்த பேட்டி வருமாறு:-

91 ஆயிரம் வாக்குகளுக்கு மேலான வித்தியாசத்தில் மிகப்பெரிய வெற்றியை ஈரோடு கிழக்கு தொகுதி மக்கள் எனக்கு அளித்திருக்கிறார்கள். இடைத்தேர்தலுக்கு மட்டும் இப்படிப்பட்ட வெற்றியை மக்கள் கொடுக்கவில்லை, 2026-ம் ஆண்டின் சட்டமன்ற தேர்தல் வெற்றி இது.

ஈரோடு கிழக்கு தொகுதி மக்கள் மனநிலை போலவே 234 தொகுதி மக்களுடைய மனநிலைவரும் சட்டமன்றத் தேர்தலில் இருக்கும். ஈரோடு கிழக்கு தொகுதி மக்களுக்கு நன்றி.

### கேவலமான விமர்சனம்

இந்த தொகுதியின் மறைந்த எம்.எல்.ஏ.க்கள் ஏற்கனவே பல வாக்குறுதிகளை அளித்துள்ளனர். அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த ஒரு ஆண்டு காலத்தில் நிலுவையில் இருக்கும் பணிகளை ஆய்வு செய்து நிறைவேற்றுவதே என்னுடைய நோக்கமாக இருக்கும்.

பெரியாரை விமர்சித்ததன் மூலம் ஒரு மோசமான அருவருக்கத்தக்க அரசியல்வாதியாகத்தான் அவரை (சீமான்) பார்க்கிறேன். பெரியார் தவறு செய்திருந்தால் அதை சுட்டிக் காட்டலாம். ஆனால் நேற்று பெரியாரையே பாராட்டிவிட்டு இன்று அரசியல் ஆதாயத்திற்கு ஆர்.எஸ்.எஸ். வகுத்துக் கொடுத்த திட்டங்களை செயல்படுத்துவதற்காக அவரை, அதுவும் அவர் பிறந்த இடத்தில் அவ்வளவு கேவலமாக பெரியாரை விமர்சனம் செய்கிறார் என்றால், இவர் மனித பிறவியாக இருக்க முடியாது.

### எலுமிச்சை பழம்

. கையில் எலுமிச்சை பழம் வைத்துக் கொண்டு வேட்பு மனு தாக்கல் செய்தது, பெரிய விவகாரமாக பேசப்படுகிறது. நான் பெரியாருடைய கொள்கையில் மிகுந்த நம்பிக்கை உள்ளவன் என்றாலும், இறை பக்தி இல்லாதவன் அல்ல. நான் கொண்டு சென்ற எலுமிச்சை பழத்திற்கும், கோவிலுக்கும் சம்பந்தம் இல்லை. கோவிலில் இருந்து நான் அதை கொண்டு வரவில்லை. வேட்பு மனு தாக்கல் செய்யும் போது அதை மேஜையில் வைத்து விட்டுத்தான் தாக்கல் செய்தேன். இதுவரை எங்கள் தலைவரும் இதுகுறித்து எதுவும் கேட்கவில்லை.

எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து வந்தாலும் சரி, தனித்தனியே வந்தாலும் சரி, களம் காணுவதற்கு தி.மு.க. தயாராக இருக்கிறது. 2026-ம் ஆண்டு தேர்தலில் முதல்-அமைச்சரும், துணை முதல்-அமைச்சரும் பல்வேறு வியூகங்களை வகுத்து, தேர்தல் யுக்திகளை பயன்படுத்தப் போகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

DINAMALAR

Dated: 11.02.2025

# குற்ற பின்னணி இருந்தால் தேர்தலில் நிற்க நிரந்தர தடை?

**புதுடில்லி, பிப். 11–**

கிரிமினல் வழக்குகளில் தண்டனை பெற்ற எம்.பி., மற்றும் எம்.எல்.ஏ.,க்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிட நிரந்தரமாக தடை விதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு பதில் அளிக்கும்படி, மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாயா தாக்கல் செய்த மனுவில், 'எம்.பி.,க்கள் மற்றும் எம்.எல்.ஏ.,க்கள் குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றால் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் – 1951ன் படி, அவர்கள் ஆறு ஆண்டுகள் வரை தேர்தலில் போட்டியிட தடை உள்ளது. ஆனால், இந்த சட்டத்தை மாற்றி வாழ்நாள் தடை விதிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என, கூறியிருந்தார்.

இந்த மனு, நீதிபதிகள் தீபங்கர் தத்தா மற்றும் மன்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், 'இது, அரசியல் சாசன பிரிவு சார்ந்த விவகாரம் என்பதால் இந்த விவகாரத்தில் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு உதவ வேண்டும். அடுத்த மூன்று வாரத்தில் மத்திய அரசு மற்றும் தலைமை தேர்தல் கமிஷன் இந்த மனு மீது விரிவான பிரமாண பத்திரங்கள் தாக்கல் செய்ய வேண்டும்' என, உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

DINAKARAN
Dated: 11.02.2025

# கிரிமினல் குற்ற வழக்கில் சிக்கிய எம்.பி, எம்.எல்.ஏக்கள் தேர்தலில் நிற்க நிரந்தர தடை?

## தேர்தல் ஆணையம், ஒன்றிய அரசு 3 வாரத்தில் பதிலளிக்க வேண்டும்

### உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு

புதுடெல்லி, பிப்.11: உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யா என்பவர் கடந்த 2017ம் ஆண்டு ஒரு பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார். அதில், "அரசு மற்றும் நீதித்துறை பணிகளில் உள்ள ஒருவர் குற்ற வழக்கில் தண்டிக்கப்பட்டால் வாழ்நாள் முழுவதும் அவர்கள் தொடர்ந்து பணியாற்ற அரசால் தடை விதிக்கப்படுகிறது. ஆனால் கிரிமினல் குற்ற வழக்கில் அரசியல்வாதிகள் எம்பி, எம்.எல்.ஏக்கள் தண்டிக்கப்படும்போது, தண்டனை முடிந்து 6 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டால் அவர்கள் எம்.எல்.ஏ மற்றும் அமைச்சராக கூட பதவி வகிக்க முடியும். எனவே அப்படிபட்டவர்கள் தேர்தலில் நிற்க வாழ்நாள் தடை விதிக்க வேண்டும்" என்று வலியுறுத்தி இருந்தார்.

மேற்கண்ட வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் திபங்கர் தத்தா மற்றும் மன்மோகன் ஆகியோர் அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், "இந்த வழக்கு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் அரசியலமைப்பை பொறுத்தது. எனவே இதற்கு ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி நீதிமன்றத்திற்கு உதவிட வேண்டும். அதேபோன்று மூன்று வாரங்களுக்குள் இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் ஒன்றிய அரசு ஆகியோர் இந்த விவகாரத்தில் விரிவான விவரங்கள் கொண்ட பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டும். மேலும் இந்த வழக்கு தொடர்பான கருத்துக்களை தெரிவிக்க மாநில அரசுகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதில் குறிப்பிட்ட காலக்கெடுவில் பிரமாண பத்திரங்களை தாக்கல் செய்யும்பட்சத்தில், அடுத்தக்கட்டமாக வாதங்களை மேற்கொள்ளலாம்" என்று உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தனர்.



DINAMANI
Dated: 11.02.2025

# ஈரோடு கிழக்கு தொகுதி எம்எல்ஏவாக பதவியேற்றார் வி.சி.சந்திரகுமார்



ஈரோடு கிழக்கு பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற வி.சி.சந்திரகுமாருக்கு, சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திங்கள்கிழமை பதவிப் பிரமாணம் செய்து வைத்த சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு. உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் திமுக கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்டோர்.

**சென்னை, பிப். 10:** ஈரோடு கிழக்கு தொகுதி சட்டப் பேரவை உறுப்பினராக வி.சி.சந்திரகுமார் பதவியேற்றுக் கொண்டார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றநிகழ்வில், சந்திரகுமாருக்கு பதவியேற்பு உறுதிமொழியை பேரவைத் தலைவர் மு.அப்பாவு செய்து வைத்தார்.

பேரவை உறுப்பினருக்கான உறுதிமொழியை வாசித்து அதில் சந்திரகுமார் கையொப்பமிட்டார். முன்னதாக, வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பேரவைத் தலைவரிடம் அவர் வழங்கினார்.

பேரவைத் தலைவரின் அறையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், துரைமுருகன், கே.என். நேரு, சு.முத்துசாமி உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் முத்தரசன், மதிமுக பொதுச் செயலர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து, தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களுக்கு சட்டப் பேரவை உறுப்பினர் சந்திரகுமார் அளித்த பேட்டி: ஈரோடு கிழக்கு தொகுதி மக்களுக்காக முந்தைய உறுப்பினர்கள் பல வாக்குறுதிகளை அளித்திருந்தனர். அந்த வாக்குறுதிகளின்படி,பணிகள்தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த ஓராண்டு காலத்தில் நிலுவைப் பணிகளை ஆய்வுசெய்து, முந்தைய உறுப்பினர்கள் விட்டுச் சென்ற பணிகளை தொடர்வதே எனது நோக்கமாக இருக்கும் என்றார் அவர்.